## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகாரசபையின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிணிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களை திருத்தம் மேற்கொள்வதற்காக ஏற்பட்ட ரூபா 1,215,299 செலவு, சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் ஆயுட் காலத்தை முன்னெடுத்துச் செல்வதற்காகவும், அதனூடாக பொருளாதார நலன்களை பல வருடங்களுக்கு பெறக்கூடிய இயலுமை காணப்படுவதனால் இந்த கணக்கிடுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | மீண்டெழும் தன்மையிலான செலவினங்கள் என்பதனால் வருடத்தின் செலவினமாக கருதப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு வெளி நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,092,540 பெறுமதியான ஒலி அலை உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் வருட நிதிக்கூற்றுக்களின் மூலமாக சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சரியான சொத்துக்கள் கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | தேறிய பெறுமதி ரூபா 1,747,535 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த புலனாகாத சொத்துக்கள் மற்றும் அந்த சொத்துக்களை பெறுமானத் தேய்வுக்குட்படுத்தல் சம்பந்தமாக பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் தவிர்த்தல் அதிகாரச்சட்டத்தின் (6)(ஈ) ஆம் பிரிவு | சட்டத்தின் பிரதான செயற்பாடுகளிலிருந்து விலகி சேரும் கழிவுப் பொருட்களை பரீட்சித்து உறுதிப்படுத்தாமல் கடலிற்கு விடப்பட்டிருந்ததுடன் அபாயகரமான பொருட்களான சிகிச்சை கழிவுகள் நீண்ட குழாய் மூலம் கடலுக்குள் நேரடியாக வெளியேற்றப்பட்டிருந்தன. | 2020 ஆம் வருடத்திலிருந்து இந்த முறைமைக்கு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் தவிர்த்தல் அதிகாரச்சட்டத்தின் (6)(உ) ஆம் பிரிவு | உராய்வு நீக்கி எண்ணெய் கழிவுகளின் தொகுதியின் கீழ் பதிவு செய்யப்படும் அனைத்து சேவை வழங்குனர்களினாலும் ஆரம்ப வைப்பாக ரூபா 300,000 இடப்பட வேண்மெனினும் அதற்கு புறம்பாக உராய்வு நீக்கி எண்ணெய்க்காக ரூபா 150,000 படியும், குப்பைகள் மற்றும் மலசலகூட கழிவுகளுக்காக ரூபா 20,000 படியும் வைப்பிலிடப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2013 யூன் 28 ஆம் திகதிய 37/1816 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | முகத்துவராம் மற்றும் வெள்ளவத்த ஆகிய இடங்களிலிருந்து கழிவுப்பொருட்கள் கடலுக்குள் இடுவதற்குரிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட இரண்டாம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அரச நிறுவனங்களினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப் பிரதேசங்களில் அதிகளவில் காணப்படுவதால் அம் மாசடைதலை குறைப்பதற்கு நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த ரூபா 321,394 தொகையான 15 காசோலைகள் இந் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 110(ஈ) | விபத்திற்குள்ளான 4 வாகனங்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்கனவே விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்குரிய பொருட்கள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | நிதிப்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,952,703 ஆன மிகை யொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 27,476,884 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 24,524,180 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சம்பளங்கள், வேதனங்கள், ஊழியர் நலன்கள் மற்றும் வேறு மீண்டெழும் செலவினங்கள் ரூபா 27,506,018 ஆல் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே தரமற்ற வகையில் 10 கொங்கிறீட் மேசைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 131,075 செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த | விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பணக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு முன்னர் தரமானதாக நிர்மாணிக்கப் |

| | | |
|---|---|---|
| மேசைகள் தரமற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தினால் அழிவடைந்து காணப்பட்டது. | | பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடல் எல்லையிலிருந்து 300 மீற்றர் வரையிலான எல்லையில் கடலுக்குள் கழிவுப்பொருள் வெளியேற்றப்படும் வகையில் மலசலகூடங்கள் மற்றும் கழிவுப்பொருட்கள் மீள் சுழற்சி செய்யப்படாமல் கடலுக்குள் விடுதல் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை அறிவூட்டுவதற்கும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தாமல் இடப்படும் கழிவுப்பொருட்கள் காரணமாக சுற்றுலா கைத்தொழிவுக்கு விசேடமாக தாக்கமளிக்கக் கூடியதாக இருப்பதால் அப்பிரச்சினை தொடர்பாக சுற்றுலா அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் செயற்படக்கூடிய வழிவகைகள் தொடர்பாக அறிக்கையொன்று தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த அறிக்கையை துரிதமாக பெற்று கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுகக்ல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காலி அலுவலகத்திற்கு ரூபா 2,197,998 தொகை செலவு செய்து ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வுகூடத்தின் செயற்பாடுகளுக்காக பயிற்றப்பட்ட உத்தியோகத்தர் அந்த அலுவலகத்திற்கு இணைக்கப்படாமல் பிரதான அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் போயிருந்தது. | சம தகமையுடைய கடல்சார் சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார் | நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 5,700,000 பெறுமதியான Atomic Absorption Spectrophotometer மூன்று வருடத்திற்கு அதிகமான காலமாக எவ்வித உபயோகமுமின்றி ஆய்வுகூடத்திற்குள் செயலிழந்து காணப்படுவதுடன் அந்த உபகரணங்கள் பாவனைக்கு உட்படுத்த முடியாததன் காரணமாக திருத்தங்களுக்காக ரூபா 1,212,299 தொகைக்கு முகவர் நிறுவனமொன்றுடன் உடன்பாட்டிற்கு வந்திருந்தது. | இந்த நடவடிக்கைகளை துரிதமாக செய்து முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சொத்துக்களை உச்ச பயன்பாட்டிற்கு உட்பட்டு பாவனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறைவேற்று முகாமைத்துவ மட்டத்தில் 05 பதவிகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடங்களாக இருந்ததுடன் அதில் ஒரு பதவிக்கு 2018 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இதுவரை ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிரந்தர பதவியணியினர் வெற்றிடங்களை துரிதமாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) ஆட்சேர்ப்பு முறைமைக்கு அப்பால் அடிப்படை தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பதாரி ஒருவர் நிதி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். | விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக இரண்டு கணக்காய்வு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. | அதிகார சபைக்குச் சொந்தமான 09 பிராந்திய அலுவலகங்கள் காணப்படுவதால் உள்ளக கணக்காய்வு பிரிவின் |

| | | |
|---|---|---|
| | | பதவியணியினர் அதிகரித்துக் கொள்ள வேண்டும். |

**4.2 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதும் அக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் செயற்படுத்துவதில் மந்தமான நிலைமையில் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வுக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும். |

**4.3 சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாதம்பிட்டிய சுத்திகரிப்பு பம்பியறைக்கு வெளி நிறுவனங்களின் மலம் மற்றும் கழிவு நீரை எடுத்து வரும் பவுசர்களுக்கு இடையே பெற்றுக்கொள்ளப்படுகின்ற தெிவுகளுக்கிடையே ஒரு சிலவற்றை மாத்திரம் அந்த இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆய்வு கூடத்தில் பரிசேதனைக்கு உட்படுத்தப்படுவதோடு அங்கு பரிசோதிக்கப்படுவது பெரும்பாலும் கழிவு நீரின் பீஎச் (PH) பெறுமதி மாத்திரம் என்பது அவதானிக்கப்பட்டது. போதுமான பதவியணியினர் இல்லாத நிலையில் ஒரு பரிசோதனை உத்தியோகத்தர் மாத்திரம் சேவையாற்றும் இந்த ஆய்வுகூடத்தனூடாக மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை முடிவுகள் விளைவற்ற நடவடிக்கையாக உள்ளதுடன் பம்பியறைக்கு இறக்குவதற்கு முன்னர் குறித்த தரமின்றிய கழிவுநீர் உடனான பவுசரை அடையாளம் காண்பதற்கு முடியாததன் காரணமாக ஏற்படக்கூடிய கடல்சார் மாசடைதலை தடுப்பதற்கு முடியாது போயுள்ளது. | கொழும்பு மாநகர சபையின் தேவையான ஒத்துழைப்பு கிடைக்காமையால் அது செயற்படுத்தப் படவில்லை. | நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் பலவீனமான சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீன் பிடி கைத்தொழிலுடன் அண்மித்தாக இடம் பெறும் கடல் மாசடைதலை முறைமையை இணங்காண்பதன் மூலம் அதனை குறைப்பதற்காக தேசிய தந்திரோபாய மற்றும் செயலாற்றல் திட்டம் அதிகார சபையினால் வரைவாக்கப்பட்டிருந்ததுடன் அந்த வரைவாக்கத் திட்டம் செயலாற்றல் மட்டத்திற்கு இட்டுச் செல்வதற்காக மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடி அதனை மிகவும் ஆக்கபூர்வமானதாக தயாரிப்பதற்காக கூட்டமொன்றை கூட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் அத்திட்டத்தின் நடவடிக்கையை நிச்சயித்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீன்பிடி துறைமுகங்களில் கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் பலவீனமான சந்தர்ப்பங்கள் இணங்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) தீவு முழுவதும் 25 மீன்பிடி துறைமுகங்கள் காணப்படுவதுடன் அதன் மூலம் பாரியளவில் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் கடலில் சேர்கின்றன. கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமை இல்லாமையால் மீன்பிடி சூழலில் படகு திருத்த வேலைகள் மற்றும் பூச்சு பூசுதல் நடவடிக்கைகளாலும் கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களாலும் அதிகளவில் கடல் மாசடைவதற்கு உள்ளாகியிருந்தது. | அமைச்சு செயலாளரின் மூலம் தேவையான நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாசடைதலை குறைப்பதற்கு துரிதமாக செயற்பட வேண்டும். |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 05 நோக்கங்கள் இனங்காணப் பட்டுள்ளதுடன் அது ஐக்கிய நாடுகளின் கவனத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது மீளாய்வாண்டின் இறுதி வரை அதற்காக கிடைக்க வேண்டிய ஆலோசனைகள் அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அனைத்த அரச நிறுவனங்களின் செயற்பாடுகளும் கட்டாயமாக இருப்பதால் அதற்காக துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |